குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.12/2018

அ.சா. 1

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் 11–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காசி விஸ்வநாதன் | தொழில் | |
| தந்தை பெயர் | பழனியப்பகவுண்டர் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.08 மணி,

Accused Saravanan Absent. Petition u/s.317 Cr.P.C fiiled and allowed. Advocate Mr.Ezhilarasu present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது புது நல்லாகவுண்டம்பட்டியில் குடியிருந்து, செங்கல் வியாபாரம் மற்றும் ரியல் எஸ்டேட் செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவ காலத்தில் நான் ஆணைகவுண்டம்பட்டியில் வாடகை வீட்டில் குடியிருந்து வந்தேன்.

2. கடந்த 02.02.2005 ஆம் தேதி எங்கள் சொந்த ஊரான புது நல்லாகவுண்டம்பட்டியில் பண்டிகை நடந்ததால், நான் ஆணைகவுண்டம்பட்டியில் குடியிருந்த வீட்டை பூட்டிவிட்டு, புதுநல்லாவுண்டம்பட்டிக்கு சென்றுவிட்டு, 04.02.2005 ஆம் தேதி மீண்டும் வீட்டிற்கு வந்து பார்த்துவிட்டு, வீட்டினை பூட்டிவிட்டு, மீண்டும் புதுநல்லாகவுண்டம்பட்டிக்கு சென்றுவிட்டேன்.

3. பின்பு, 05.02.2005 ஆம் தேதி, காலை 09.00 மணியளவில், நான் குடியிருக்கும் வீட்டின் உரிமையாளர் நாகராஜ் என்பவரிடம் வேலை செய்யும் குமார் என்பவர் எனக்கு போன் செய்து, என் வீட்டின் பூட்டி உடைக்கப்பட்டிருப்பதாக சொன்னார். நான் உடனடியாக வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு, மீண்டும் அது பூட்டியது போல் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் கதவை நெம்பி பூட்டை உடைத்த அடையாளம் இருந்தது–

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2025.08.11 17:54:16 +0530

4. வீட்டின் உள்ளே சென்று பார்த்தபோது, பீரோ திறந்த நிலையில் இருந்தது. உள்ளே இருந்த புடவைகள் கலைக்கப்பட்ட நிலையில் இருந்தது. பீரோவில் இருக்கும் சிறிய நகை வைக்கும் அறை திறந்திருந்தது. அதில் வைத்திருந்த 5 பவுன் ஆரம், ஒரு ஜோடி தங்கத்தோடு, குழந்தைகள் வெள்ளி கால் செயின் ஒரு ஜோடி எனது மனைவியின் வெள்ளி கால் செயின் ஒரு ஜோடி ஆகியவை மற்றும் பீரோவில் இருந்த ஒரு பட்டுப்புடவை காணவில்லை.

5. வீட்டில் இருந்த ஒனிடா டி.வி மற்றும் டி.வி டேபிளின் மேல் வைத்திருந்த ரிலையன்ஸ் செல்போன் ஆகியவற்றையும் காணவில்லை. நான், காவல் நிலையத்திற்கு புகார் அளிக்க சென்றபோது, சூரமங்கலம் காவல் நிலையத்திலிருந்து, போன் செய்து, என்னை சூரமங்கலம் காவல் நிலையம் வரச்சொன்னார்கள்.

6. நான், அவர்களிடம் எனது வீட்டில் திருடுபோய்விட்டதாகவும், அதுசம்மந்தமாக ஓமலூர் காவல் நிலையம் செல்வதாகவும் கூறினேன். அவர்கள், என் வீட்டில் திருடிய பொருட்களை மீட்டுவிட்டதாகவும் அதனால், என்னை வருமாறும் சொன்னார்கள். நான், அவர்களிடம் ஓமலூர் காவல்நிலையத்தில் புகார் அளித்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு, ஓமலூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன்.

7. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. (**அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

8. பின்பு நான் சூரமங்கலம் காவல் நிலையத்தை போனில் தொடர்பு கொண்டபோது, அவர்கள் என்னிடம் என்வீட்டில் களவு போன பொருட்களை பிடித்துவிட்டதாகவும், அதனை வந்து அடையாளம் காட்டுமாறும் சொன்னார்கள். நான் அவர்களிடம் எப்படி பிடித்தீர்கள் என்று கேட்டதற்கு, அவர்கள் ரோந்து பணியிலிருந்தபோது, வாகன சோதனை செய்தபோது, ஆட்டோவில் டி.வி இருந்துள்ளதை பார்த்து, விசாரிக்க, வைத்திருந்த நபர்கள் பழுது பார்ப்பதற்காக கொண்டு சென்றதாக சொல்லியுள்ளார்கள்.

9. இரவு நேரத்தில் அவர்கள் வந்ததால் சந்தேகப்பட்டு பார்த்தபோது, அந்த நபர்கள் இருவரும், ஏற்கனவே கள்ள நோட்டு வழக்கில் சம்மந்தமுடைய நபர்கள் என்று

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.08.11 17:54:21 +0530

தெரியவந்ததாகவும், அங்கிருந்து அந்த நபர்கள் இருவரும் பொருட்களை அங்கே விட்டுவிட்டு ஓடிவிட்டதாகவும் என்னிடம் சொன்னார்கள்.

10. நான் சூரமங்கலம் காவல் நிலையம் சென்று பார்த்தபோது, அங்கு எனது டி.வி. தோடு, கால் செயின் இருந்தது, ஆனால் ஆரம் அங்கு இல்லை. நான் அவர்களிடம் டி.வி வாங்கியதற்கான ரசீது மற்றும் நகைகள் வாங்கியதற்கான இரசீதுகளை கொடுத்தேன். அதன்பின்பு, அந்த பொருட்களை ஓமலூர் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைப்பதாக சொன்னார்கள். பின்பு, நான் நீதிமன்றத்தில் மனு செய்து, எனது பொருட்களை பெற்றுக்கொண்டேன்.

11. அதன்பின்பு, சிறிது நாட்கள் கழித்து என் வீட்டிலிருந்து திருடுபோன 5 பவுன் ஆரத்தை உருக்கிய நிலையில் தங்கக்கட்டியாக போலிசார் மீட்டு நீதிமன்றத்தில் ஒப்படைத்தார்கள். பின்பு நான் நீதிமன்றத்தில் மனு செய்து, அந்த தங்கக்கட்டியை பெற்றுக்கொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள உருக்கிய நிலையில் உள்ள தங்ககட்டியை தான் நான் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக்கொண்டேன். (**அந்த புகைப்படங்கள் 4 எண்ணிக்கைகள் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**(அரசு தரப்பு சாட்சி வழக்கு சொத்தை மீட்டது பொறுத்தமட்டில் பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

12. கடந்த 08.03.2005 ஆம் தேதி மாலை 15.45 மணிக்கு எதிரி சரவணன் என்பவரிடமிருந்து ஓமலூர் காவல் உதவி ஆய்வாளர் சண்முகம் என்பவர் கருப்பூர் பேருந்து நிறுத்தத்தின் அருகே வைத்து, ஒனிடா கலர் டி.வி. ரிலையன் போன் ஆகியவற்றை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அதன்பின்பு 10.04.2005 ஆம் தேதி காலை 07.30 மணியளவில் கருப்பூர் இன்ஜினியரிங் காலேஜ் சாலை அருகே எதிரி செந்தில் என்பவரிடமிருந்து, கொளத்தூர் காவல் நிலைய தலைமைக்காவலர் வேலாயுதம் என்பவர் சுமார் 6 1/2 செ.மீ நீளம், 36.06 கிராம் எடையுள்ள தங்கக்கட்டி, 1.050 கிராம் எடையுள்ள சிறிய தோடு, 34 கிராம் எடையுள்ள வெள்ளி கால்செயின் 1 ஜோடி, 30 கிராம் எடையுள்ள சிறிய கால்செயின் ஒரு ஜோடி மற்றும் டி.வி.எஸ் எக்ஸ்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.08.11 17:54:26 +0530

எல் இருசக்கர வாகனம் ஆகியவற்றை கைப்பற்றினார் என்றும், மேற்படி வழக்கு சொத்தினை கைப்பற்றிய விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்பதால், சூரமங்கலம் போலிசார் கைப்பற்றியதாக தவறுதலாக கைப்பற்றியதாக சொல்கிறேன் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

13. எனக்கு சம்பவம் பற்றி போன் மூலமாக தகவல் கிடைத்தது. நான், வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீட்டின் கதவு மூடப்பட்டிருந்ததா அல்லது திறந்திருந்ததா என்றால், மூடப்பட்டிருந்தது. பூட்டும் அதே போல் தான் போடப்பட்டிருந்தது. நான், மூடியிருந்த கதவை திறந்துவிட்டுதான் வீட்டுற்குள் சென்று பார்த்தேன் என்றால் சரி.

14. நான் உள்ளே சென்று பார்த்தபோது பீரோவின் தகவு திறந்திருந்தது. பீரோவிற்குள் நகை வைத்திருந்த அறை பூட்டப்படவில்லை, மூடப்பட்டிருந்தது. நான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க செல்வதற்கு முன்பு, திறந்திருந்த பீரோவையும், வீட்டின் கதவையும் மூடிவிட்டு சென்றனா என்றால், நான், சம்பவம் நடந்தது குறித்து, போலிசாருக்கு தகவல் கொடுத்தவுடன் என்னை பொருட்களில் கை வைக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டு, கைரேகை நிபுணர்கள் அங்கு வரவைப்பதாக சொல்லியிருந்தார்கள். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க செல்வதற்கு முன்பு கைரேகை நிபுணர்கள் எனது வீட்டிற்கு வந்துவிட்டார்கள்.

15. கைரேகை நிபுணர்கள் எனது வீட்டில் சோதனை செய்துகொண்டிருந்தபோது, நான் ஓமலூர் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க வந்துவிட்டேன் என்றால் சரி. நான் புகார் கொடுப்பதற்கு முன்பு, ஓமலூர் காவல் நியைலத்திற்கு தகவல் கொடுத்தேன் என்று கூறியுள்ள நிலையில், எந்த அதிகாரியிடமிருந்து தகவல் கொடுத்தேன் என்றால் தெரியவில்லை.

16. நான், புகார் கொடுத்தபோது காலை 11.00 மணி இருக்கும். நான், புகார் கொடுத்த பின்பு, போலிசார் எனது வீட்டிற்கு வந்தார்கள். நான், சூரமங்கலம் காவல் நிலையத்திற்கு அன்றைய தினமே 12.00 – 12.30 மணிக்குள் சென்று, வழக்கு சொத்தை அடையாளம் காட்டினேன்.

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.08.11 17:54:30 +0530

17. நான் எனது புகாரில் யார் மீதாவது சந்தேகம் உள்ளதாக கூறியுள்ளேனா என்றால், கூறியுள்ளேன். தீவட்டிப்பட்டியை சேர்ந்த ஆசைதம்பி என்கிற வையாபுரி என்பவர் எங்கள் ஊரில் செங்கல்சூளை வைத்து நடத்தி வருகிறார். அவர் மீது சந்தேகம் இருப்பதாக கூறியிருந்தேன்.

18. சூரமங்கலம் காவல் நிலையத்தில் இருந்து திருடுபோன எனது பொருட்களை கண்டுபிடித்துவிட்டதாக சொல்லியிருந்த நிலையில், நான் புகாரில் ஆசைதம்பி என்கிற வையாபுரி என்பவர் மீது சந்தேகம் இருப்பதாக கூறியதற்கான காரணம் என்ன என்றால், எனது வீட்டிற்கு எதிரே உள்ள நிலத்தை ஆசைதம்பி என்கிற வையாபுரிக்கு நான் வாங்கிக் கொடுத்த எனக்கும் அவரும் இடையே பணம் சம்மந்தமான பிரச்சினை ஏற்பட்டது. அதனால் அவர் மீது சந்தேகம் இருப்பதாக கூறிவிட்டேன்.

19. எனக்கும், வையாபுரிக்குமான பிரச்சினையில் வையாபுரி தான் எனக்கு பணம் தரவேண்டியிருந்தது. எனக்கும், வையாபுரிக்கும் இடையில் இருந்த பிரச்சினையின் காரணமாக நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தீவட்டிப்பட்டி காவல் நிலையத்தில் வைத்து ஆசைத்தம்பி என்கிற வையாபுரி எனது பணத்தை திருப்பி கொடுத்துவிட்டதால் எங்களுக்கிடையிலான பிரச்சினை முடிந்துவிட்டது.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 03.56 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.08.11 17:54:33 +0530